


# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் | ஏனாத்தூர் ஊராட்சி, செட்டியார்பேட்டை | ஒப்பிலா மணி<br>மீனாட்சிசுந்தரம் |
| 2 | | காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் | கிளார் | ஒப்பிலா மணி<br>மீனாட்சிசுந்தரம் |
| 3 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 4 | 11–வது வட்டம் | ஒப்பிலா மணி<br>மீனாட்சிசுந்தரம் |
| 4 | 24.06.2025 | கருங்குழி பேரூர் | மேலவலம்பேட்டை | போடி காமராஜ்<br>எஸ்.கே.ஸ்ரீராம் |
| 5 | | மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் | நெல்வாய் கூட்ரோடு | போடி காமராஜ்<br>எஸ்.கே.ஸ்ரீராம் |
| 6 | | மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் | முன்னூத்திகுப்பம் | போடி காமராஜ்<br>எஸ்.கே.ஸ்ரீராம் |
| 7 | 25.06.2025 | உத்திரமேரூர் பேரூர் | பேரறிஞர் அண்ணா சிலை அருகில் | எம்.எல்.நாதன்<br>வழக்கறிஞர் யாசர் |
| 8 | | உத்திரமேரூர் ஒன்றியம் | பட்டாங்குளம், தளவராம்பூண்டி ஊராட்சி | எம்.எல்.நாதன்<br>வழக்கறிஞர் யாசர் |
| 9 | | காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் | மாகறல் ஊராட்சி | எம்.எல்.நாதன்<br>வழக்கறிஞர் யாசர் |
| 10 | | அச்சிறுப்பாக்கம் பேரூர் | காந்தி நகர் 12–வது வட்டம் | பவானி கண்ணன்<br>ச.பேரரசன் |
| 11 | | அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | மின்னல் சித்தாமூர் | பவானி கண்ணன்<br>ச.பேரரசன் |
| 12 | | அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | ஊனமலை | பவானி கண்ணன்<br>ச.பேரரசன் |
| 13 | 26.06.2025 | சித்தாமூர் மேற்கு ஒன்றியம் | நெற்குணம் | ஆரூர் மணிவண்ணன்<br>விஷார் தமிழரசன் |
| 14 | | சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் | அமந்தங்கரனை ஊராட்சி | ஆரூர் மணிவண்ணன்<br>விஷார் தமிழரசன் |
| 15 | | திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம் | வாயலூர் | ஆரூர் மணிவண்ணன்<br>விஷார் தமிழரசன் |
| 16 | 27.06.2025 | இடைக்கழிநாடு பேரூர் | கடப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன்<br>தே.சிலம்பரசன் |
| 17 | | இடைக்கழிநாடு பேரூர் | நெல்லூர் | நாத்திகம் நாகராஜன்<br>தே.சிலம்பரசன் |
| 18 | 28.06.2025 | மதுராந்தகம் நகரம் | தேரடி தெரு | திருப்பூர் ரஜினி செந்தில்<br>ச.பேரரசன் |
| 19 | | இலத்தூர் வடக்கு ஒன்றியம் | கல்குளம் | திருப்பூர் ரஜினி செந்தில்<br>ச.பேரரசன் |
| 20 | | இலத்தூர் தெற்கு ஒன்றியம் | சீக்கினாங்குப்பம் | திருப்பூர் ரஜினி செந்தில்<br>ச.பேரரசன் |
| 21 | 29.06.2025 | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 1 | வட்டம் 1 | சேலம் சுஜாதா<br>தாவூத்<br>மா.பூபதி |
| 22 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 2 | வட்டம் 22 | சேலம் சுஜாதா<br>தாவூத்<br>மா.பூபதி |
| 23 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 3 | வட்டம் 51 | சேலம் சுஜாதா<br>தாவூத்<br>மா.பூபதி |
| 24 | 30.06.2025 | சாலவாக்கம் ஒன்றியம் | அரும்புளியூர் ஊராட்சி, மாம்பாக்கம் | குமரி பிரபாகரன்<br>தே.சிலம்பரசன் |
| 25 | | வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் | தென்னேரி ஊராட்சி | குமரி பிரபாகரன்<br>தே.சிலம்பரசன் |
| 26 | | வாலாஜாபாத் பேரூர் | நேரு நகர் 11–வது வட்டம் | குமரி பிரபாகரன்<br>தே.சிலம்பரசன் |

**காஞ்சிபுரம்**

நாள் : 21.06.2025






# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.சுமன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், கட்டமைப்புகளின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பகுதி பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | ஒசூர் கிழக்குப் பகுதி | சீதாராம் மேடு | லயோலா ராஜசேகர்<br>வே.சீனிவாசன் |
| 2 | | ஒசூர் மேற்குப் பகுதி | ஜூஜூவாடி | லயோலா ராஜசேகர்<br>வே.சீனிவாசன் |
| 3 | | ஒசூர் ஒன்றியம் | பேருந்து நிலையம், பாகலூர். | அப்துல் ரஹ்மான் பாரி<br>சே.ஆனந்த சைனி |
| 4 | | ஒசூர் வடக்குப் பகுதி | அரசனட்டி | அப்துல் ரஹ்மான் பாரி<br>சே.ஆனந்த சைனி |
| 5 | | ஒசூர் தெற்குப் பகுதி | டி.வி.எஸ். நகர் | அப்துல் ரஹ்மான் பாரி<br>சே.ஆனந்த சைனி |
| 6 | 24.06.2025 | தளி வடக்கு ஒன்றியம் | மதகொண்டப்பள்ளி | லயோலா ராஜசேகர்<br>வே.சீனிவாசன் |
| 7 | | தளி தெற்கு ஒன்றியம் | கக்கதாசம் | லயோலா ராஜசேகர்<br>வே.சீனிவாசன் |
| 8 | | தேன்கனிக்கோட்டை பேரூர் மற்றும் கெலமங்கலம் பேரூர் | பேருந்து நிலையம், தேன்கனிக்கோட்டை. | லயோலா ராஜசேகர்<br>வே.சீனிவாசன் |
| 9 | | கெலமங்கலம் மேற்கு ஒன்றியம் | இருதுக்கோட்டை | சேர்காடு கென்னடி<br>எஸ்.பவித்ரா |
| 10 | | அஞ்செட்டி ஒன்றியம் | பேருந்து நிலையம், அஞ்செட்டி. | சேர்காடு கென்னடி<br>எஸ்.பவித்ரா |
| 11 | 25.06.2025 | வேப்பனப்பள்ளி கிழக்கு ஒன்றியம் | மாதேப்பள்ளி கூட்ரோடு | சேலம் சுஜாதா<br>வே.சீனிவாசன் |
| 12 | | வேப்பனப்பள்ளி மேற்கு ஒன்றியம் | குப்பச்சிப்பாறை | சேலம் சுஜாதா<br>வே.சீனிவாசன் |
| 13 | | சூளகிரி வடக்கு ஒன்றியம் | காமன்தொட்டி | அப்துல் ரஹ்மான் பாரி<br>சே.ஆனந்த சைனி |
| 14 | | சூளகிரி தெற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம், சூளகிரி. | சேலம் சுஜாதா<br>வே.சீனிவாசன் |
| 15 | | கெலமங்கலம் கிழக்கு ஒன்றியம் | ராயக்கோட்டை அண்ணா சிலை | அப்துல் ரஹ்மான் பாரி<br>சே.ஆனந்த சைனி |

**கிருஷ்ணகிரி**

நாள் : 21.06.2025



# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் மாவட்டம், கணியம்பாடி தெற்கு ஒன்றியம், பென்னாத்தூர் பேரூரைச் சேர்ந்த ஜி.நாகலிங்கம், கே.சரத்பாபு, ஏ.சிவராஜ், பி.கே.எஸ்.சந்தோஷ் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18,
நாள் : 21.6.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

## தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) தலைமைச் சங்க நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படுகிறது.

**தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்**

தலைவர் – **பிடிசி எஸ். ரவி (எ) சிவக்குமார்**

பொதுச் செயலாளர் – **த. ஆறுமுகம்**

பொருளாளர் – **எம். பெருமாள்**

மத்திய சங்கத்தின் இதர நிர்வாகிகள் மற்றும் பணிமனை வாரியாக நிர்வாகிகள் பட்டியல் தலைமைக் கழகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18,
நாள் : 21.6.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின. கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றி வரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு துணை நிற்கும்!

## நிறுவனத் தலைவர் திருவூர் சா.அருணன் அறிக்கை!



சென்னை, ஜூன் 22 -

எப்போதெல்லாம் கலைஞர் ஆட்சி வருகின்றாதோ அப்போதெல்லாம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பொற் காலம், என்று சொன்னால் அது மிகையாகாது அதற்கு உதாரணங்கள் பல. 1978ஆம் ஆண்டு மேனிலைக் கல்வியில் தொழிற்கல்வி தொடங் சுப்பட்டு தொழிற் கல்வி ஆசிரியர்களை தொகுப் பூதியத்தில் நியமனம் செய்தது அப்போதைய அ.தி.மு.க. அரசு பத்தாண்டுகளாக பல போராட்டங்கள் நடத்தியும் அவர்களை பணி நிறந்தரம் செய்யவில்லை. பின்பு 1989ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் அனைவரையும் பணி நிறந்தரம் செய்தார் கலைஞர்.

இதுபோன்று அடுக்கிக் கொண்டே போகலாம் 2003 ம் ஆண்டு பழைய ஓய்வூதியத்தை ரத்து செய்து புதிய பங்களிப்பு ஊதியத்தை நடைமுறைப்படுத்தி யதை அடுத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுப் பட்ட சூழ்நிலையில் நியாயமான கோரிக்கையை நிவர்த்தி செய்யாமல் அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டு சுமார் 1 ஒரு லட்சத்து 50 ஆயிரத்திக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள். ஆசிரியர்களை பணி நீக்கம் செய்து பல ஆயிரக்கணக்கானோரை சிறையில் அடைத்தது சின்னாப்பின்னமாக்கியது. அப்போது சுமார் 15 ஆயிரம் இளநிலை உதவியாளர்களை ரூ4000/மாதம் தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்தது அவர்களும் பணி நிறந்தரம் செய்ய பல கோரிக்கைகள் வைத்தார்கள் ஆனால் அவர்களை பணி நிறந்தரம் செய்யவில்லை.

**தொகுப்பூதியத்தை ஒழித்து பணி நிரந்தரம் செய்த கலைஞர் அரசு !**

2004ம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. அரசு நிதிநிலையை காரணம் காட்டி வேலைவாய்ப்பிற்கு தடையாணை பிறப்பித்து சுமார் 56 ஆயிரம் அனைத்து வகை ஆசிரியர்களை ஐந்து வருட ஒப்பந்த அடிப்படையில் அதாவது இடைநிலை மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு மாதம் ரூ. 3,000/மும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.4,000/மும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் களுக்கு 4,500/ என்ற ஐந்து வருட ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை வஞ்சித்தது அ.தி.மு.க. அரசு,

பின்பு 2006ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கலைஞர் அவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் போராட்டதின் போது நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள் 15 ஆயிரம் பேரை பணி நிறந்தரம் செய்தார் கலைஞர். கலைஞர் அவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் தானே நியமித்தார்கள் என கொஞ்சமும் கரு தாமல் அவர்களின் எதிர் காலத்தை எண்ணி தேர் வாரியத்தின் மூலமாக அவர்களுக்குள்ளாக தேர்வை நடத்தி அனைவரையும் பணி நிறந்தரம் செய்து அவர்களின் வாழ்வில் விளக்கேற்றிவர் கலைஞர்,

தமிழ்நாடு முதலமைச்சர் மாநில உரிமைகளை பெற்று தருவதில் மற்ற மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் வேந்தர், தமிழ்நாட்டு மக்களுக்கு மகளிர் இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமை தொகை ரு 1000 , பசியோடு வரும் மாணவர்களுக்கு வயிறார காலை உணவு திட்டம், மாணவர்கள் மேற்படிப் பிற்கு செல்ல கல்லூரி ககனவு, வேலைவாய்ப்புபெற நான் முதல்வன் திட்டம் , புதுமை பெண் திட்டம், நான் புதல்வன் திட்டம் , உயிர் காக்கும் 24 திட்டம் , மக்களை தேடி மருத்துவம் , அம்பேத்கார் , தொழில் முனைவோர் திட்டம், என பல திட்டங்களை வகுத்து அறிவித்து அதை நடைமுறை படுத்தி ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின அவர்கள் அப்பா.

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் முன் மாதிரி முதலமைச்சர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று இருக்க முடியும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் முதலமைச்சர் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கையை படிப்படியாக நிறைவேற்றுவார் என்ற ஒரே வார்த்தையில் போராட்டத்தை அறிவிக்காத போராட்டம் நடத்தாத ஒரே அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு என்பதை பறைச்சாற்றுகிறேன் , ஜாக்டோ ஜியோ வினர் அறிவித்த அனைத்து போராட்டத்தையும் எதிர்த்து தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு பங்கேற்காது என ஊடகம் மற்றும் பத்திரிகை வாயிலாக தெரிவித்து எங்களுக்கு முதலமைச்சர் மீது நம்பிக்கை இருக்கிறது என்பதை தெரிவித்து கடந்த நான்கு ஆண்டுகளாக எந்த போராட்டத்தையும் நடத்தாமல் கோரிக்கைகள் மட்டுமே வைத்தோம், எஞ்சிய கோரிக்கைகளும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு அன்றும் இன்றும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பக்கமே. முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு போராடும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு வெல்லும்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் திருவூர்.சா.அருணன் கூறியுள்ளார்.